1975 ஏப்ரல் 16]

கணக்கு இருந்தால்தான் அப்படி ஒரு திட்டம் போடமுடியும். அப்படி எடுக்கவில்லை என்றால் அதை எடுத்து, அவர்களுக்கு ''ஃபேஸ்டு புரகிராம்'' அடிப்படையில் வீட்டு வசதி கிடைக்க அரசு வழி வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதிலேயும் முழுக்க, முழுக்க அவர்களையே பணம் போட்டுக் கொள்ளச் சொல்லாமல் இருக்க வேண்டும். அவர்கள் வாழ முடியாத நிலைமையில் இருப்பதால் தான் அவர்களுக்கு அரசாங்கம் பென்ஷன் கொடுக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஓரளவிற்காவது மானியம் வழங்கி வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும், அவர்களுடைய கணக்கை எடுத்து ''ஃபேஸ்டு புரகிராம்'' அடிப்படையிலே வீடுகளை அவர்களுக்குக் கட்டிக் கொடுக்க அரசுமுன் வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரியத்திற்கு கணக்கு எடுக்கின்ற வேலை அநேகமாக இல்லை. யார் விண்ணப்பம் கொடுத்தாலும் அவர்களுக்கு வீடு கட்டித் தரும் வேலையைத்தான் மேற்கொண்டிருக்கிறோம். இதை அரசே தன்னிச்சையாகச் செய்யும் வேலையாக உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். தியாகிகளுக்குத்தான் பென்ஷன் தருகிறோம். மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களாக இருந்தால் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 10 சதவிகித பணத்தை முன்னால் செலுத்தினால் 13,000 ரூபாய் மதிப்புள்ள வீட்டினைக் கட்டித் தருகிறோம். இந்தத் திட்டம் வீட்டு வசதி வாரியத்தினால் அளிக்கப்பட்டு, அது நாடெங்கும் நடைபெற்று வருகிறது. அதிலே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே பங்கேற்ற தியாகிகளானாலும் அல்லது காங்கிரஸ் தியாகிகளானாலும் வீடு கட்டிக் கொள்ள முன் வருவார்களேயானால் அவர்களுக்கு அப்படி கட்டித்தர அரசு தயாராக இருக்கிறது.

சிவகங்கையிலுள்ள மீன் வளத்துறை அலுவலகம்

*696 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிவகங்கையிலுள்ள மீன் வளத்துறை உதவி டைரக்டர் அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : ஆம்.

மீன் பதப்படுத்தும் நிலையங்கள்

*697 வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—